திரு. வி. கே. கோதண்டராமன் : சார், ஒரு மாநிலக் காட்டிலிருந்து மற்றொரு மாநிலக் காடுகளுக்கு யானைகள் தனியாகப் போவது சாத்தியம், தடுக்க முடியாது என்பது உண்மைதான். ஆனால், பக்கத்திலே உள்ள மாநிலத்திலே உள்ளவர்கள் யானைகளைப் பழக்கி, இங்கேயுள்ள யானைகளை, அந்தப் பழகிய யானைகள் மூலமாகக் கொண்டு போவதாகச் சொல்லப்படுகிறதே, இது அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளதா ? அப்படியானால் அந்த விஷயத்தில் என்ன கவனம் செலுத்தப்படும் என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, பழக்கப்படுத்தப்பட்டிருக்கிற யானைகள் வேறு காட்டு யானைகளை இழுத்துக்கொண்டு போகும் என்பது இப்போது மாண்புமிகு உறுப்பினர் மூலம் ஒரு புதிய செய்தியாக அரசுக்கு வந்து இருக்கிறது. அந்த முயற்சிகள் வெற்றிபெறுமானால், அதைப்பெருக்க முயற்சிகள் மேற்கொள்வதோடு, ஒரு வேளை அது நல்ல முறையில் பயன்படுமானால், நம்முடைய யானைகளையும் அவ்வாறு பழக்கப்படுத்தி வேறு காடுகளில் இருந்து யானைகளைக் கொண்டு வர முயற்சிக்கலாம்.

திரு. யா. சை. மு. யூசுப் : தலைவரவர்களே, நாட்டு யானைகளுக்கு செயற்கை கருத்தரிப்பு முறை மூலம் யானைக் குட்டிகளை உண்டாக்க காட்டில் வளர்க்கும் முயற்சிகள் இந்த அரசால் மேற்கொள்ளப்படுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, இயலுமானால், அது பரிசீலிக்கப்படவேண்டியத் திட்டம்.

சுற்றுலா மாளிகையில் பணிபுரியும் கடைநிலை ஊழியர்கள்.

*வினா எண் 241— திரு. எஸ். வி. இராமசாமி : மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு சுற்றுலா மாளிகையில் பணிபுரியும் கடைநிலை ஊழியர்களை நிரந்தரப்படுத்தும் திட்டம் உண்டா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தமிழ்நாடு சுற்றுலா மாளிகையில் பணிபுரியும் ஊழியர்கள் தமிழ்நாடு ''கேட்டரிங் எஸ்டாபிளிஸ்மென்ட்,, சட்டம் 1958ன் கீழ் பணிபுரிந்தால், அச்சட்டத்தின்படி, தொடர்ந்து ஆறு மாத காலத்திற்குள் 120 நாட்கள் பணிபுரிந்துள்ள ஊழியர்கள் நிரந்தரமாககப்பட்ட ஊழியர்களாக கருதப்படுகின்றனர். ஒரு வருடத்திற்குள் 240 நாட்கள் பணிபுரிந்துவிட்டால், விடுப்பு தகுதிகள் கிடைக்கப்

1979 மார்ச் 6]

பெறுகிறனர். ஒரு மாதம் முன்னதாக தெரியப்படுத்தப்பட்டோ அல்லது அதற்குப்பதிலாக ஒரு மாதச் சம்பளத்துடனோ அன்றி அவர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட மாட்டார்கள்.

உதவி குற்ற விசாரணை வழக்கறிஞர்கள்.

*வினா எண். 242— திரு. ஓ. சோ. வேலுச்சாமி : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போலீஸ் கமிஷன் அறிக்கையில் முதல்நிலை, இரண்டாம் நிலை உதவி அரசு குற்ற விசாரணை வழக்கறிஞர்களின் (A.P.P-I & A.P.P-II) தகுதியை உயர்த்துவது குறித்து பரிந்துரைகள் ஏதேனும் செய்துள்ளதா ?

(ஆ) அந்தப் பரிந்துரைகளை அரசு ஏற்றுக் கொண்டுள்ளதா?

(இ) ஆம் எனில், எப்பொழுது முதல் செயல்படுத்தப்படும் ?

திரு. எம். ஏ. ஜெயவேலு [அமைச்சரின் பேரவைச் செயலர்) : அரசு உதவி வழக்கு நடத்துநர் (நிலை 2) ஊதிய விதத்தை உயர்த்துவது பற்றி பரிசீலனை செய்து கொண்டு இருக்கிற நேரத்தில், மூன்றாவது ஊதிய ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. அப்போது காவல் துறை இன்ஸ்பெக்டர் ஜெனரல் பரிந்துரை செய்து அனுப்பிய செயற்குறிப்பு ஊதியக்குழுவிற்கு அனுப்பப்பட்டது. ஊதியக் குழு அளித்த பரிந்துரைகளை அரசு ஏற்று, அதை அமுல் படுத்திவருகிறது. அந்த வகையில் அவர்களுக்கு சம்பளம் உயர்வு 1978-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ஆம் நாள் முதல் அளிக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஓ. சோ. வேலுச்சாமி : தலைவரவர்களே, ஏ. பி. பி. கிரேட் 2 அவர்களின் தகுதியை உயர்த்துவதைப் பற்றி நான் கேள்வி கேட்டு இருக்கிறேன். ஆனால், அமைச்சரின் செயலர் அவர்கள் ஊதிய உயர்வைப் பற்றிச் சொல்கிறார்கள். தகுதி உயர்த்துவது குறித்து எடுக்கப்பட்ட முடிவு என்ன ?

திரு. எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்) : தலைவர் அவர்களே, அரசு உதவி வழக்கு நடத்துனர் (நிலை 2) பதவி வகிப்போருக்கும் முதல் நிலை வழக்கு நடத்துனர் பதவ்வகிப்போருக்கும் இடையே இடைவெளி நிறைய இருக்கிறது. இருப்பினும் தகுதி உயர்த்தப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.